நிதியாண்டே அந்த இரண்டு கட்டடங்களையும் கட்டுவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உபகரணங்கள், பெட்ரோல் ஸ்கூட்டர்கள் போன்றவற்றை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிலேயே கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு நலத் திட்டங்களுக்கான விழாக்கள் மாவட்ட அளவில் நடைபெறும்போது மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டங்களில் நடக்கின்ற அரசு விழாக்களில் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு பலன்களைப் பெற்றுத் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

நவீன அரிசி ஆலை

***35045—திரு. வி. பன்னீர்செல்வம்**:

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதிக்கு அருகே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் போளூர் அதிநவீன அரிசி

2019 பிப்ரவரி 11]

ஆலை மாதம் ஒன்றுக்கு 2,500 மெ.டன் நெல் அரைவை செய்யும் திறனுடன் அமைக்கப்பட்டு, நல்ல நிலையில் இயங்கி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் ஒரு நவீன அரிசி ஆலை அமைப்பதற்கான தேவை ஏற்படும்பட்சத்தில் அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்து அதன்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மறைந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் சார்பில் செய்யாறு மற்றும் போளூர் ஆகிய இரண்டு இடங்களில் நவீன அரிசி ஆலைகள் இயங்கிவருகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் 8 இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. என்னுடைய கலசப்பாக்கம் தொகுதி முழுவதும் வேளாண்மையை நம்பியிருக்கின்ற தொகுதி. ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. எனது கலசப்பாக்கம் தொகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கை என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் நிதியாண்டிலேயே இந்த ஆலையை அமைத்திட முன்வருவார்களா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

[2019 பிப்ரவரி 11

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம், தற்போது மாநிலம் முழுவதும் 21 நவீன அரிசி ஆலைகள், அதாவது 15 புழுங்கல் அரிசி அரைக்கிற ஆலைகளும், 6 பச்சரிசி அரைக்கிற ஆலைகளும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில், கலசப்பாக்கம் தொகுதியிலிருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவில் போளூர் அதிநவீன அரிசி ஆலைபுழுங்கல் அரிசி அரைக்கிற ஆலையாகவும், செய்யாறு நவீன அரிசி ஆலை, பச்சரிசி அரைக்கிற ஆலையாகவும் இயங்கி வருகின்றன. இவ்விரண்டு ஆலைகளையும் சேர்த்து மாதமொன்றுக்கு மொத்தம் 5 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு நெல் அரைவை செய்வதற்கான திறன் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒரு நவீன அரிசி ஆலை தொடங்க வேண்டுமென்றால், இடம், கிடங்குகள், தளவாட சாமான்கள் உட்பட சுமார் 20 கோடி ரூபாய் செலவு ஏற்படுகிறது. எனவே, எதிர்வரும் காலத்தில், தேவையின் அடிப்படையில், நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில், அரசின் சார்பில் 4 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் 1 நேரடி நெல் கொள்முதல் நிலையமும் இயங்கி வருகின்றன. எனது கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள கலசப்பாக்கத்தில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2019 பிப்ரவரி 11]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையம் எந்த இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று கோருகிறார்களோ, உடனடியாக அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளினுடைய நெல்லை கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒரு நபர் குடும்ப அட்டை இரத்தாகி நிறைய பேர் கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தொகுதிகளில் ஒரு நபர் குடும்ப அட்டை வைத்திருக்கக்கூடிய நபர்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஓரளவுக்கு ஆய்வு செய்தபோது, அவர்களில் உண்மையாகவே தனியாக வாழக்கூடிய பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒருசில நேர்வுகளில், கணவர் இறந்துபோயிருக்கிறார்; அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு குழந்தைகளின் ஆதரவும் இல்லை. நேரடியாக ஆய்வு செய்ததில், இவற்றையெல்லாம் நாங்கள் கண்டறிந்தோம். ஒரு நபர் குடும்ப அட்டைகளில் வெவ்வேறு முகவரி இருக்கிறதா என்பதை மட்டும் உறுதி செய்துகொள்ளுங்கள். அவர்களுக்கு ஆதார் அட்டை இருக்கிறதா என்பதையும்கூட பாருங்கள்; தவறில்லை. தற்போது ஒரு நபர் குடும்ப அட்டை இரத்து செய்யப்பட்டுவிட்டதா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், அவர்களுக்கு எந்தப் பொருளும் வழங்கப்படுவதில்லை. நிறைய தாய்மார்கள் இதுகுறித்த கோரிக்கையைத்தான் வைக்கிறார்கள். இதைக் கனிவோடு பரிசீலித்து, ஒரு நபர் குடும்ப அட்டை என்ற காரணத்திற்காக இரத்து செய்யாமல், உடனடியாக பொருட்களை வழங்கச் சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். இந்தக் கோரிக்கையை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வைக்கின்றேன்.*

[2019 பிப்ரவரி 11

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினா நவீன அரிசி ஆலையை பற்றியது என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான ஒரு கோரிக்கையோடு வினாவினை எழுப்பியிருக்கிறார்கள்.*

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நபர் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்ற ஒரு சந்தேகத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, இப்பொருள் குறித்து கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கேட்டபோது, நான் இதே அவையில் பதில் சொல்லியிருக்கிறேன். அதாவது ஒரு நபர் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்பது சரியான செய்தி அல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *ஒரே குடும்பத்தில் இருந்தால் 5 கிலோ அரிசி மட்டும்தான் கூடுதலாகக் கிடைக்கும். ஒரு நபர் குடும்ப அட்டைகள் அதிகரித்ததால், ஓர் ஆய்வு நடந்தது. அதாவது,* verification *நடைபெற்றது. ஆய்வு மேற்கொண்டபோது, தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 33 ஆயிரம் குடும்ப அட்டைகள் மட்டும் அவ்வாறு இருப்பதாகக் கண்டறியப்பட்டன. ஒரே குடும்பத்தில் இருக்கிறவர்கள் பொருட்களை தனியாக வாங்குவதற்காகவும், சலுகைகளை தனியாகப் பெறுவதற்காகவும், எல்லா பொருட்களையும் பெறுகிற நோக்கத்திலும், அவர்கள் தனியாக ஒரு நபர் குடும்ப அட்டை பெற்றிருக்கிறார்கள் என்கிற புகாரின் அடிப்படையில் அந்த ஆய்வு நடைபெற்றது. அந்த ஆய்வில் தமிழ்நாடு முழுவதும் 33 ஆயிரம் பேர்தான் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். மற்ற யாருக்கும் நிறுத்தப்படவில்லை. ஒரு நபர் குடும்ப அட்டை வைத்திருக்கிற யாருக்கும் பொருட்கள் உடனடியாக நிறுத்தப்படாது என்பதனை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று, எங்கேயாவது*

நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த இடத்தில் என்று புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

கால்நடை கிளை நிலையம்

***38442—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்**:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திமிரி ஒன்றியம், வேம்பி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வேம்பி ஊராட்சியில் சுமார் 2,656 மாட்டினங்கள், சுமார் 3,240 ஆட்டினங்கள் மற்றும் சுமார் 4,000 கோழியினங்களுடன் சேர்த்து சுமார் 3,020 கால்நடை அலகுகள் உள்ளன. இதில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்குத் தேவையான 3,000-க்கு அதிகமான கால்நடை அலகுகள் இருப்பதால், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வேம்பி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*